Name of the Newspaper ......DINAMALAR...................... Date: 28-1-18

# மெட்ரோ ரயில் விழாவில் துள்ளிசை நடனம்

சென்னை, ஜன. 29–

மெட்ரோ ரயில் இசை விழாவில், கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த நடன கலைஞர்களின் துள்ளிசை நடனம், பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, நேரு பூங்கா வரையும், விமான நிலையத்தில் இருந்து சின்னமலை வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

பயணியர் வருகையை அதிகரிக்க, விசேஷ நாட்களில், மெட்ரோ ரயில் நிலையங்களில் இன்னிசை மற்றும் நடன, நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

குடியரசு தினத்தையொட்டி, 26ம் தேதியில் இருந்து நேற்று வரை, வடபழனி, ஆலந்துார் மற்றும் திருமங்கலம் நிலையங்களில், இசை விழாக்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் நேற்று, மூன்று நிலையங்களிலும், கர்நாடக மாநிலம், ஷிமோகாவைச் சேர்ந்த, பூதியப்பா குழுவினரின் துள்ளிசை நடனம் மற்றும் மதுரை தமிழ்நாடு கிராமிய கலைகள் வளர்ச்சி மையத்தின், கிராமிய கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள், இதை கண்டு களித்தனர்.



■ சென்னை மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த விழாவில், துள்ளிசை நடனமாடிய கலைஞர்கள். இடம்: திருமங்கலம், சென்னை.